DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
CC . No. 12 of 2020
Prosecution witness: PW1

| | |
|---|---|
| Name | வீரராகவன் |
| Fathers name | அரமாண்டி |
| Village | பெரம்பூர் |
| Age | 48 |

Accused called present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி நேரம் 3.20

1. நீங்கள் ஜெகன் என்பவருக்கு எத்தனை முறை பொருட்கள் சப்ளை செய்து உள்ளீர்கள் என்றால் 3 முறை. தேதி எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. கடைசியாக எப்போது பொருள் சப்ளை செய்தீர்கள் என்றால் 2019 வருடம். என்ன பொருட்கள் சப்ளை செய்தீர்கள் என்றால் ஷானல் மற்றும் ஆங்கில். அது எவ்வளவு பொருட்கள் கொடுத்தீர்கள் என்றால் சுமார் 2,100 கிலோ மதிப்புள்ள மேற்கொண்ட பொருட்களை கொடுத்தேன். கடைசியாக என்ன பிரண்டு பொருள் கொடுத்தீர்கள் என்றால் Sail என்ற பிரண்டின் பொருட்கள் கொடுத்தேன்.

2. அதற்கு முன்பாக KSS மற்றும் KRS பிரண்டு கொடுத்தேன். நீங்கள் எப்போதும் KSS மற்றும் KRS பிரண்டு சப்ளை செய்து வருகின்றீர்கள் என்றால் சரியல்ல. யார் என்ன பிரண்டு கேட்கிறார்களோ அதை நான் சப்ளை செய்வேன். நீங்கள் உங்களுடைய வாடிக்கையாருக்கு நீங்கள் Sail பிரண்டு சப்ளை செய்வது இல்லை என்றால் சரியல்ல. 3 முறை நீங்கள் எதிரிக்கு பொருட்கள் சப்ளை செய்ததாக கூறுகிறீர்கள் அதில் முதல் பில்லுடைய தொகை எவ்வளவு என்றால் ரூபாய் 1,50,000.இரண்டாது ˙ பில்லுடைய தொகை எவ்வளவு என்றால் ரூபாய் 75,000 முதல் ரூபாய் 78,000 வரை இருக்கும் மூன்றாம் பில்லுடைய தொகை எவ்வளவு என்றால் 2,00,000 ரூபாய் மதிப்பு இருக்கும்.

3. முதல் பில்லுடைய தொகை எதிரி உங்களுக்கு செலுத்தியுள்ளரா என்றால் என்னுடைய வங்கி கணக்கிற்கு செலுத்தியுள்ளார். இரண்டாவது மற்றும் மூன்றாவது பில்லுக்கு பணம் செலுத்திவிட்டரா என்றால் இல்லை. நீங்கள் ரிட்டைல் பிஸ்னஸ்

செய்கின்றீர்கள் என்றால் சரிதான். ரிட்டைல் பிஸ்னஸ் செய்யும்போது நீங்கள் உங்கள் வங்கி கணக்கில் தான் பணம் பெற்று வருகின்றீகளா என்றால் ஆமாம். நீங்கள் எதிரியிடம் பணமாக உங்களுக்கு கொடுக்கவேண்டிய 1 மற்றும் 2ம் பில்லின் தொகையை பெற்றுவிட்டீர்கள் என்றால் இல்லை.

4. என்னிடம் காட்டப்டும் EX A7 ஆவணத்தில் 25.04.2019 அன்று என்னுடைய வங்கி கணக்கில் நான் 1 லட்சம் ரூபாய் டேபாசிட் செய்துள்ளேன் என்றால் சரிதான். 31.05.2019 அன்று என்னுடைய வங்கி கணக்கில் நான் 1 லட்சம் ரூபாய் டேபாசிட் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எதிரி கொடுத்த தொகையை தான் நீங்கள் தங்களுடைய வங்கி கணக்கில் செலுத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஒரு பொருள் நீங்கள் சப்ளை செய்யும்போது அதற்கான GST பணத்தை நீங்கள் வசூல் செய்கின்றீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு வாடிக்கையாளிடமிருந்து பெறும் GST தொகையை கணக்கில் செலுத்தப்படுகின்றது என்றால் சரிதான்.

5. 12.07.2019ம் தேதியிட்ட பில்லிற்கு உண்டான GST தொகையை நான் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பில்லிற்கான தொகையை எதிரியிடம் இருந்து வசூல் செய்த காரணத்தினால் தான் இந்த பில்லிற்கான GST தொகையை GST வரியில் செலுத்தியுள்ளேன் என்றால் நான் மேற்படி பணத்தை வாங்கவில்லை. எதிரிக்கு உங்களுக்கும் மெட்டிரியல் சப்ளை செய்ததற்காக தொகை சம்பந்தமாக விரோதம் ஏற்பட்டது என்றால் வாக்குவாதம் மற்றும் ஏற்பட்டது.

6. எதிரியின் மீது காவல் நிலையத்தில் என்ன புகார் கொடுத்தீர்கள் என்றால் நான் மெட்டிரியல் சப்ளை செய்து விட்டேன் எனக்கு வரவேண்டிய தொகை வரவேண்டும் என்று புகார் கொடுத்தேன். எவ்வளவு தொகை கொடுக்கவேண்டும் என்று நீங்கள் குறிபிடவில்லை என்றால் சரிதான். எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்கள் என்றால் ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி எதிரிக்கு அழைப்பானை அலைபேசி மூலம் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். இரண்டாவது முறை அழைப்பானை கொடுத்து விசாரணை செய்தார்கள் என்றால் அவர் வரவில்லை நான் மட்டும் சென்றேன்.

7. நீங்கள் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல்முறை அலைப்பேசி மூலம அழைத்து எதிரி காவல் நிலையத்திற்கு வந்தபோது 3 தவணையாக ரூபாய் 1 லட்சம் ஆக மொத்தம் 3லட்சம் தருவதாக எழுதிக்கொடுத்து சென்றார் ஆனால் முதல் தவணை பணத்தையே கொடுக்கவில்லை. அதன் பின்னர் தான் எதிரிக்கு அழைப்பானை சார்பு

செய்யப்பட்டது.நீங்கள் கூறுவது போல் எதிரி ஏதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்ற பின் எதிரி உங்களுக்கு வக்கீல் நேட்டீஸ் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். மேற்படி வக்கீல் நேட்டீஸ்க்கு பதில் நேட்டீஸ் கொடுத்துள்ளேன். புகார் மற்றும் பதில் நேட்டீஸ் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. அந்த அறிவிப்பில் நான் அளித்துள்ள புகார் பொய் புகார் என்றும், எதிரிக்கு எனக்கு எந்த தொகையும் கொடுக்கவேண்யதில்லை என்று தெரிவித்துள்ளார் என்றும், அதற்கு நான் எந்தவிதமான பதில் அறிவிப்பு அளிக்கவில்லை என்றால் பதில் கொடுத்துள்ளேன். நீங்கள் பதில் கொடுக்கவில்லை அதனால் தான் அந்த பதில் நேட்டீஸை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. திருவள்ளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரி என் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான் அதன் அசல் வழக்கு எண் 92-2019. அவ்வழக்கு எதிரியை நான் பணம் கேட்டு என்னை தொந்தரவு செய்யக்கூடாது என்று தாக்கல் செய்தார் அது எனக்கு சாதகமாக முடிவு கொடுக்கப்பட்டது. (நீங்கள் அலுவகத்திற்கு சென்று அவரை தொந்தரவு செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு அவருடைய அலுவலகம் எங்கே இருக்கிறது என்று தெரியாது.) மேற்படி வழக்கில் வழங்கபட்ட தீர்ப்பிற்காக மேல்முறை செய்துள்ளார் என்றால் எனக்கு தற்போர்து தான் தெரியவந்தது. அந்த வழக்கில் வழக்கறிஞரை நான் நியமித்துள்ளேன்.

10. எதிரி உங்களுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று அசல் வழக்கு எண் 92-2019 ல் தீர்ப்பாகவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கை பற்றி வேறு ஏதுவும் தெரியவில்லை வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். எதிரி 27.07.2019ம் அன்று வழங்கபட்ட அறிவிப்பில் Blue Star நிறுவனத்திற்கு ஜீன் மாதம் கொடுக்கவேண்டிய பொருட்களை ஜீலை மாதம் 13ம் தேதி தான் வழங்கினீர்கள் என்றால் சரியல்ல. அவர் கேட் மறுநாள் நான் பொருள் சப்ளை செய்தேன். மேற்படி எதிரி ஜீன் பொருள் கொடுக்கவேண்டும் என்று அறிவிப்பில் கூறியதற்கு நீங்கள் எழுத்துபூர்வமான மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரி பொருள் கேட்ட மறுநாள் பொருள் கொடுத்துவிட்டேன்.

11. எதிரி உங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அது பொய் வழக்கு. எதற்காக உங்கள் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் நான் பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக புகார்

கொடுக்கப்பட்டது. 12.07.2019 ல் Blue Star நிறுவணம் நீங்கள் அவர்கள் கேட்டதை விட குறைவான பொருள் வழங்கியதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. EX A9 எதிரி எனக்கு கொடுக்கப்பட்ட பில் என்றால் சரிதான்.

12. Blue Star நிறுவணம் எனக்கு எதுவும் பில் கொடுக்கவில்லை. எதிரியின் வாடிக்கையாளரான Blue Star நிறுவணத்திற்கு அவர் கேட்ட பொருள்களை நாங்கள் சப்ளை செய்த காரணத்தில் எதிரிக்கு மேற்கொண்டு எந்த ஆடரும் கிடைக்காமல் தொழில் பாதிப்பு ஏற்பட்டது அதனால் தான் எனக்கும் எதிரிக்கும் விரோதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 12.07.2019 ல் சப்ளை செய்ய வேண்டிய மெட்டிரியலுக்கு முன்பணமாக எதிரியிடமிருந்து 12.06.2019 அன்று பணம் வாங்கியுள்ளீர்கள் என்றால் இல்லை. EX A7 ஆவணத்தின் படி 12.06.2019ம் தேதி எதிரி எனக்கு 1,45,756 ரூபாய் வங்கி கணக்கில் செலுத்தியுள்ளார் என்றால் ஏற்கனவே வாங்கிய மெட்டிரியலுக்கு கொடுத்தார். 1,45,756 ரூபாய் முதல் இரண்டு பில்லுக்கு குறிப்பிட்டுள்ள தொகை இல்லை என்றால் சரிதான். Blue Star நிறுவணம் மற்றும் எதிரியும் சேர்ந்து மோசடியான பில்லை தயாரித்து உங்களை ஏமாற்றுவதாக நீங்கள் அசல் வழக்கில் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். Blue Star நிறுவணத்தை இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிதான் போலியான பில்லை தயாரித்தார். 1,45,756 ரூபாய் அந்த தொகை எவ்வாறு கணக்கிடப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது எதிரி தான் அந்த தொகையை எனது வங்கி கணக்கில் செலுத்தினார் அவர் இரண்டு பில்லையும் கையில் வைத்திருந்தார்.

13. எதிரியின் பெற்றோரை நான் பிறந்ததிலிருந்தே எனக்கு தெரியும். 12.07.2019 ல் சம்பவத்திற்கு பிறகு பெற்றோருக்கு அழைப்பானை அனுப்பினீர்களா என்றால் அனுப்பினேன். எனக்கு அவர்கள் 6 லட்சம் ரூபாய் பணம் கொடுக்கவேண்டும் என்பதற்காக நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன்.அந்த பணத்தை பெற்றுக்கொண்டேனா என்றால் 3 வருட காலத்திற்கு மேல் ஆனதால் பணம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். நான் கூறுவுது தவறு என்றாலும் எதிரியின் பெற்றோர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவகத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் நடைபெற்ற விசாரணையில் நான் பணம் கொடுக்கவேண்டும் என்று தெரிவிப்பது உண்மையல்ல என்ற காரணத்தினால் அப்புகார் முடித்துவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகார் ஏதுவும் கொடுக்கவில்லை. 3 வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

14. 12.07.2019ம் தேதியிட்ட பில் தொடர்பாக எனக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக போலியான ஆவணங்களை தயாரித்து எதிரியின் பெற்றோருக்கு பணம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து பிறகு எதிரிக்கும் மிரட்டல் விடுத்தேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் எதிரியின் மீது அளித்த புகாரில் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் எதிரி நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்துவிட்டதால் நீதிமன்றத்திற்கு சென்று நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு காவல்துறையினர் தெரிவித்தனர். எதிரி எனக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை.

15. நீங்கள் எதிரியிடம் அழுத்தம் கொடுத்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்சரியல்ல. எதிரி உங்களுக்கு உண்மையாகவே ரூபாய் 3,29,785 (3 பில்களும் சேர்த்து) கொடுக்கவேண்டும் என்றால் அந்த தொகையை குறிப்பிட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பீர்கள். எதிரி உங்களுக்கு பணம் கொடுக்கவேண்டிய கடமை இல்லாததத்தினால் விரோதத்துடன் காவல் நிலையத்தில் பொய்யாக 12.07.2019ம் தேதியிட்ட பில்லிற்கான தொகை மட்டும் கொடுக்க வேண்டும் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீங்கள் எதிரி காவல்துறையில் 3 தவணையான பணம் கொடுப்பதாக எழுதிக்கொடுத்த கடிதம் ஆனது காவல்துறையினர் மிரட்டி எழுதி வாங்கிவிட்டனர் என்றால் சரியல்ல. எதிரி தானாக முன்வந்து எழுதிக்கொடுத்தர். நீங்கள் கொடுத்திருக்கும் புகாரில் உண்மை எதுவும் இல்லை இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 4.50